## 34. நிலையாமை

**331.** *நில்லாத வற்றை நிலையின என்றுணரும்*
*புல்லறி வாண்மை கடை*

**நிலையில்லாதவைகளை என்றும்**
**நிலையானதாகவே எப்போதும்**
**நினைக்கும் அறிவானது**
**நிச்சயம் கடைந்தெடுத்த கடையானது !**

**332.** *கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்*
*போக்கும் அறுவிளிந் தற்று*

**கூத்தாடும் இடத்தில் மக்கள்**
**கூடுவதைப் போல சேரச் சேர செல்வம்**
**கூடும் ! கூத்து முடிந்ததும்**
**கூட்டம் கலைவதைப் போல் செல்வமும் கரையும் !**

**333.** *அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்*
*அற்குப ஆங்கே செயல்*

**ஓரிடத்தில் தேங்கி நிற்பதில்லை செல்வம் !**
**ஓடோடி உருண்டோடிடும் செல்வம் !**
**ஓடை போல் ஓடி, ஓட்டாண்டி ஆவதற்குள்**
**ஓங்கிய நிலையான அறத்தை நிறுவ வேண்டும் !**

**334.** *நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்*
*வாள துணர்வார்ப் பெறின்*

**நாள் எனப்படுவது கால அளவு ! – அது**
**நாளும் ஆயுளைக் குறைத்து**
**உடலிலிருந்து உயிரை அறுக்கும் வாள் ! – இதை**
**உணர்பவர்களுக்கு உண்மை விளங்கும் !**

**335.** *நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை*
*மேற்சென்று செய்யப் படும்*

**நாக்கு தள்ளிச் சுருண்டு விக்கல் எழும்பி–**
**நாழிகையில் நாண்டு கொண்டு விழும்**
**நிச்சயமில்லா வாழ்க்கையினை உணர்ந்து**
**நிச்சயம் நற்பணிகளை முன்பே ஆற்றிட வேண்டும் !**

**336.** *நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை யுடைத்திவ் வுலகு*

**நேற்று இருந்த ஒருவன்**
**நேரம் காலம் கடந்து**
**நொடியில் இன்று இல்லை எனும்**
**நொடிப்பொழுதும் உலகம் பெருமை கொள்ளும் !**

**337.** *ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப*
*கோடியு மல்ல பல*

**ஒரு பொழுது கூட வாழ்க்கையில்**
**ஒரு "முறையோடு" வாழ வேண்டுமென**
**ஒரு கணம் கூட அறிய மாட்டார் – ஆனால்**
**ஒரு கோடி எண்ணக் கோட்டைகள் கட்டுவார் !**

**338.** *குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே*
*உடம்போ டுயிரிடை நட்பு*

**முட்டையிலிருந்து குஞ்சு பொறிந்ததும்**
**முகிழும் பறவை பறப்பது போல்**
**உடம்பு எனும் ஓட்டிற்கும்**
**உயிருக்கும் உள்ள நட்பு அத்தகையதே !**

**339.** *உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு*

**உறங்குவது போல் வருவது இறப்பு**
**உறங்கி விழிப்பது போல் வருவது பிறப்பு !**
**உறங்குவதும் உறங்கி விழிப்பதும்**
**உருமாறி உருமாறி வருவதுதான் பிறப்பும் இறப்பும் !**

**340.** *புக்கி லமைந்தின்று கொல்லோ உடம்பினுள்*
*துச்சி லிருந்த உயிர்க்கு*

**உடலில் ஒட்டியிருந்த உயிர்**
**உடலை விட்டுப் பிரிந்தவுடன்**
**நிலையாக தங்கியிருக்க**
**நிதர்சனமான வீட்டை இன்னும் தேடி அலைகிறதோ ?**